<u>சாட்சிகளின் வாக்குமூலம்</u>

பாகம் III சுற்றறிக்கை உத்தரவு 2 (I) உ.வி.மு.ச.

பிரிவு 1 மற்றும் உ.வி.மு.ச.

**அ.வ.எண். 7/2021**

<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்</u>

<u>வாக்குமூலம் – வா.சா–1</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சௌந்தரி | மதம் | : | இந்து |
| த/க/பெ. | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | வயது | : | |
| தாலுகா | : | பல்லடம் | மாவட்டம் | : | திருப்பூர் |

1987ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு 10ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்கனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு 2024 ஆண்டு டிசம்பர் மாதம் 17ம் நாள் சாட்சியம்.

---

<u>**முதல் விசாரணை**</u>

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். என்னுடைய முதல் விசாரணையை நிரூபண வாக்கு மூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும், படித்துப்பார்த்து தான் கையெழுத்து போட்டேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். கீழ்க்கண்ட ஆவணங்கள்

1. 22.04.2015 தேதியிட்ட வாதி பெற்றுள்ள செட்டில்மெண்ட் பத்திரம் சான்றிட்ட நகல்.

2. 04.12.2018 தேதியிட்ட வாதி பெற்றுள்ள செட்டில்மெண்ட் பிழைதிருத்தம் பத்திரம் சான்றிட்ட நகல்.

3. 12.03.2012 தேதியிட்ட வாதியின் முன்பாத்தியஸ்தர்கள் செய்து கொண்டுள்ள பாகக்கறால் சான்றிட்ட நகல்.

4. 23.09.2020 தேதியிட்ட பட்டா மாறுதல் உத்தரவு வலைதள நகல்.

5. 24.09.2020 தேதியிட்ட எனது பெயரில் பட்டா (பட்டா எண்.2690) வலைதள நகல்.

6. 07.10.2020 தேதியிட்ட எனது ரீ.ச.எண்.292/1B, 292/3A1ன் புல வரைபடம் சான்றிட்ட நகல்.

7. 21.12.2009 தேதியிட்ட பிரதிவாதியின் கிரையப்பத்திரம் சான்றிட்ட வலைதள நகல்.

ஆகியவற்றை வாதி தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன். மேற்படி ஆவணங்கள் முறையே **வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.7** ஆவணங்கள் ஆக குறியீடு செய்யப்படுகின்றன.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN

Digitally signed by V KALIDASAN
Date: 2024.12.17 18:03:03 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.